# இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு

## பாதுகாப்பு அமைச்சு

### தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் (NBRI) மூலம் செயற்படுத்தப்படும்

### ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி (AIIB) மூலம் நிதியளிக்கப்பட்ட மட்டுப்படுத்தல் நடவடிக்கை மூலம் நிலச்சரிவு பாதிப்பை குறைக்கும் திட்டம் (RLVMMP)

### (Loan No: L0124A)

# வெற்றிடம்

02/2026 ஆம் இலக்க MSD சுற்றுநிருபத்தின் நிபந்தனைகள் அடிப்படையில் ஒப்பந்த அடிப்படை ஒன்றில் பணியமர்த்துவதற்கு RLVMMP இன் துறை மற்றும் திட்ட முகாமைத்துவ பிரிவில் பின்வரும் பதவிகளுக்காக பொருத்தமான தகுதியை பெற்ற இலங்கை பிரசைகளிடம் இருந்து இத்தால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**கணிய அளவையாளர் (பிரிவு F)**

உட்கட்டமைப்பு மேம்பாடு அல்லது தொடர்புடைய திட்டங்களுக்காக கேள்விமனு ஆவணங்கள், அளவுப் பட்டியல்கள் மற்றும் செலவுக் கணக்குகள் தயாரிப்பில் உதவிய அனுபவம் விரும்பத்தக்கது. மேலும், வெளிப்படையான மற்றும் போட்டித்தன்மையுள்ள ஒப்பந்த வழங்கலை ஆதரிக்கும் வகையில் ஒப்பந்ததாரர்களின் கேள்விமனுக்கள் மற்றும் வழங்குநர்களின் முன்மொழிவுகளை மதிப்பீடு செய்த அனுபவமும் இருத்தல் வேண்டும். ஒப்பந்த நிபந்தனைகளுக்கு ஏற்ப, சரிபார்க்கப்பட்ட அளவுகள் மற்றும் தரத் தரநிலைகளின் அடிப்படையில் இடைக்கால மற்றும் இறுதி கொடுப்பனவு சான்றிதழ்களை சரிபார்க்கவும்/ அல்லது தயாரிக்கவும் திறன் இருத்தல் வேண்டும். வடிவமைப்பு மாற்றங்கள், எதிர்பாராத நிலத்தடி நிலைமைகள் அல்லது தொழில்நுட்ப தேவைகள் காரணமாக ஏற்படும் மாறுபாடுகளை மதிப்பீடு செய்து கணக்கிடும் அனுபவமும் இருத்தல் வேண்டும். சிவில் பணிகள் மற்றும் பொருட்கள் சார்ந்த ஒப்பந்தங்கள் திட்ட இலக்குகளுக்கு ஏற்ப திறமையாகவும் பொருளாதார ரீதியாகவும் செயல்படுத்தப்பட்டு, ஒப்பந்த நிபந்தனைகளுக்கு முழுமையாக இணங்குவதை உறுதி செய்தல் வேண்டும்.

02/2026 MSD சுற்றுநிருப, இணைப்பின் F பிரிவுக்கு தொடர்புடைய x மற்றும் xi பக்கங்களில் 2 ஆவது பத்தியின்படி தேவையான தகைமைகள் மற்றும் அனுபவம்.

**பொதுவான நிபந்தனைகள்**

1. கீழ் குறிப்பிடப்பட்டவாறு விண்ணப்பங்களை ஏற்கும் மற்றும் மூடும் இறுதித் திகதியில் விண்ணப்பதாரர்கள் 64 வயதுக்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
2. பணியமர்த்தப்படும் அனைவரும் அரச அமைப்புகள் மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கு தொடர்புடைய தொடர்பு மற்றும் ஒருங்கிணைந்த செயற்பாடுகளில் தமது பணிகளை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றனர்.
3. வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட திட்டங்களில் வேலை அனுபவம் மேலதிக அனுகூலமாகும்.
4. ஆங்கில மொழியில் தேர்ச்சி, அரச ஒழுங்குமுறைகளில் பரீட்சயம் மற்றும் கணினி அறிவு மேலுள்ள பதவிகளுக்கு அத்தியாவசிய முன் தேவைகளாகும்.
5. அரச அமைச்சுகள், திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சட்டரீதியான சபைகள், மற்றும் நிறுவனங்களின் ஊழியர்களின் விண்ணப்பங்கள் தேர்வு செய்யப்பட்ட அபேட்சகரை விடுவிக்க முடியும் என்பதை குறிப்பிட்டு குறித்த நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் அனுப்புதல் வேண்டும்.

**சம்பளம்:**

6. 02/2026 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றுநிருபம் மற்றும் ஏதேனும் அதன் மாற்றங்களின்படி கொடுப்பனவுகளுடன் வழங்கப்படும். (ஊழியர் மாதச் சம்பளத்தின் 8% ஐ ஊழியர் சேமலாப நிதியத்திற்கு பங்களிப்புச் செய்யும் அதே நேரம் தொழில்வழங்குநர் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு 12% உம் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தில் 3% உம் பங்களிப்புச் செய்வார்.)

**விண்ணப்பங்கள்:**

7. தகுதி பெற்ற அபேட்சகர்கள் தொடர்புடைய கல்வி, தொழில்முறை மற்றும் அனுபவ சான்றிதழ்களின் உறுதி செய்யப்பட்ட பிரதிகளுடன் சேர்த்து உறவினர் அல்லாத இரு நடுவர்களின் பெயர்கள் மற்றும் தொடர்பு விபரங்களுடன் பூர்த்தி செய்யப்பட்ட சுயவிபரக்கோவையுடன் சேர்த்து விண்ணப்பிக்கும் பதவிகளுக்கான தமது பொருத்தம்/ தகைமையை நிரூபிக்கும் முகப்பு கடிதம் ஒன்றுடன் தமது விண்ணப்பத்தை அனுப்புவதற்கு கோரப்படுகின்றனர். அவ்வாறு இல்லாவிட்டால், குறித்த விண்ணப்பங்கள் தேர்வுக்கு கருத்தில்கொள்ளப்படமாட்டாது.
8. விண்ணப்பதாரர்கள் உறவினர் அல்லாத இரு நடுவர்களின் தொடர்பு விபரங்களுடன் கல்வி, தொழில்முறை தகைமைகள் மற்றும் அனுபவத்தை உள்ளடக்கிய தமது சுயவிபரக்கோவையுடன் சேர்த்து ஒவ்வொரு பதவிக்காகவும் வெவ்வேறாக தமது விண்ணப்பங்களை கீழ் தரப்பட்ட முகவரிக்கு 2026.07.03 அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபாலில் சமர்ப்பிப்பதற்கு கோரப்படுகின்றனர். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிடவும்.

**தபால் முகவரி: திட்டப் பணிப்பாளர்**

திட்டப் பணிப்பாளர், திட்ட முகாமைத்துவ பிரிவு, மட்டுப்படுத்தல் நடவடிக்கை மூலம் நிலச்சரிவு பாதிப்பை குறைக்கும் திட்டம் (RLVMMP), தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம், 99/1, ஜாவத்த வீதி, கொழும்பு 05, தொடர்பு இல.: 011 – 2559869

9. உயர் தகைமை மற்றும் அனுபவம் அடிப்படையில் குறுகிய பட்டியலில் சேர்க்கப்படும் அபேட்சகர்கள் நேர்முகப் பரீட்சை ஒன்றுக்காக அழைக்கப்படுவதோடு தகுதி அடிப்படையில் தேர்வு இடம்பெறும்.
10. ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு எந்த வகையான செல்வாக்கு அல்லது பிரதிநிதித்துவம் ஒன்றை மேற்கொள்ளல் விண்ணப்பம் நிராகரிப்பதற்கு காரணமாகலாம்.

**செயலாளர்,**
**பாதுகாப்பு அமைச்சு.**